வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.3,102,18,45,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்". என்னும் மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (11–7–2014) வெள்ளிக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–45 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

40. திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தின் தாமிரபரணி, கருமேனியார் மற்றும் நம்பியாற்றினை இணைத்து கன்னடியன் கால்வாயிலிருந்து வறட்சிப் பகுதியான சாத்தான்குளம் மற்றும் திசையன்விளைக்கு வாய்க்கால் அமைத்து வெள்ளநீரை எடுத்துச் செல்லும் திட்டத்திற்கான சுற்றுச்சூழல் விளைவுகளை மதிப்பிடுதல்/திட்டப் பகுதியில் சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டப் பணிகளை நியமன அடிப்படையில் திருவாளர்கள்

வாட்டர் மற்றும் பவர் கன்சல்டன்சி சர்வீசஸ் (WAPCOS) லிமிடெட்க்கு வழங்கியது குறித்து நிதி (சம்பளங்கள்) துறையின் 31-1-2014 ஆம் நாளிட்ட 30 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

41. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் (நகராட்சிகளின் வகைப்பாட்டுக்கான அளவுகோல்கள்) விதிகள் இயற்றியது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 2-12-2008 ஆம் நாளிட்ட 237 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் V/1920) 204(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

42. 2008ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சி சட்டம் 1-8-2008 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என நிர்ணயம் செய்தது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 29-7-2008 ஆம் நாளிட்ட 196 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2008ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/2008) 10(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

— ஏதுமில்லை —